மக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 21 முஹற்றம் 6 இதழ்: 297
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-12-78

யாழ்.நகர் சம்பவம்:

## விசாரணைக்குழு பற்றி வி. என்: கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை நடந்த அசம்பாவித சம்பவங்கள் குறித்து பொலிசாரல்லாத சிவில் அதிகாரிகள் தலைமையிலான குழுவொன்றை நியமித்து விசாரணை செய்யவேண்டுமென்றும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதவாறு தகுந்த நடவடிக்கை



எடுக்கப்படவேண்டுமென்றும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் சாவகச்சேரிப் பிரதிநிதியுமான திரு வி. என் நவரத்தினம் யாழ். நகரில் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தபின் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டதுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இங்குள்ள நிலைமையை எடுத்துக் கூறினர்.

இதேசமயம் கொழும்பிலிருந்து இங்கு வந்திருந்த உயர் அதிகாரிகளுடனும் அவர் தொடர்பு கொண்டு நிலைமையை எடுத்துவிளக்கினர். பிரிகேடியர் ரணசிங்காவுடனும் அவர் தொடர்புகொண்டதாகத்தெரிகிறது.

### பொலிஸ் அதிபர் உத்தரவு

யாழ். நகரில் நேற்று முன்தினம் மாலை நடந்த சம்பவங்கள் பற்றி விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உதவிப் பொலிஸ் அதிபர் திரு ரணசிங்காவை யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு எகொடப்பிட்டியா பணித்துள்ளதாகத் தெரிகிறது.

யாழ் நகரில் நடந்த சம்பவங்கள் பற்றி அரசாங்க அதிபரும் மேலிடத்துக்குத் தமது அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### தவறணை திறக்கப்பட்டது

நேற்று முன்தினம் மாலை தாக்குதலுக்குள்ளான யாழ். நகர் சாராயத் தவறணை நேற்று நண்பகலின் பின் திறந்து இயங்கத் தொடங்கியது. தாக்குதலுக்குள்ளான கடைகள் ஒன்றிரெண்டு திறக்கப்பட்டு வியாபாரம் செய்யப்படவில்லை. பொதுவாக நேற்றுகாலையில் யாழ். நகரில் பல கடைகளும் திறந்தும் திறக்கப்படாமலுமிருந்தன.

அரசாங்க அதிபர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு நிலையைச் சமாளித்ததால் கடையடைப்பு இன்றைய நிலையில் அவசியமில்லையென்று ஆலோசனை கூறப்பட்டதால் கடைகள் யாவும் திறந்து வழமைபோல் நகரம் இயங்கியது.

ஆனாலும் அச்சத்தினால் மாலையில் ஆறுமணிக்கே பல கடைகளும் மூடத் தொடங்கிவிட்டன.

வங்கி கொலை! கொள்ளை!!

# எவரும் கைதாகவில்லை

# பல இடமும் தேடுதல்!

## வளாக சாரதியும் காயம்; சம்பவம் பற்றி பலதகவல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வங்கிக் கொள்ளை, கொலை சம்பந்தமாக இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இதேசமயம் யாழ். நகரில் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை நடந்த சில அசம்பாவித சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அரசாங்கம் ஒரு உயர்மட்டக்குழுவை அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி மக்கள்வங்கிக் கொள்ளையின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான பொலிஸ் கான்ஸ்டபிள் கிங்ஸ்லி பெரேராவின் சடலம் நேற்று மரண விசாரணையின் பின் அவரது சொந்த ஊரான ஜாஎலக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அவரது ஈமைக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும் மரணமான ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் சச்சிதானந்தத்தின் ஈமக்கிரியைகள் நேற்றுமாலை அவரதுசொந்த ஊரான சிறுப்பிட்டியில் பொலிஸ் மரியாதைகளுடன் நடைபெற்றது. இறுதிச் சடங்குகளில் அரசாங்க அதிபரும் கலந்துகொண்டார் வங்கிக் கொள்ளையில் துப்பாக்கிச்சூட்டுக்குப்பலியான இரு பொலிஸ்கான்ஸ்டபிள்களின் மரணம்குறித்தும் யாழ் நீதவான் திரு டபிள்யு வீரரத்தின விசாரணை நடத்தினார்.

### துப்பாக்கியுடன்வந்தனரா?

வங்கியில் கொள்ளையடிக்க வந்தவர்கள் நான்கு இளைஞர்களா அதற்கு மேற்பட்டோ தொகையினரா என்ற சந்தேகமும் இப்பொழுது பொலிஸ் வட்டாரங்களில் எழுந்துள்ளது வங்கிக்கு அருகேயுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற ஒரு இளைஞன் வங்கியின் முன்னால் நின்ற வாகனத்தில் பணப்பையை உதவி மனேஜர் ஏற்றிக்கொண்டிருந்தபோது வந்து அந்த யந்திரத்துப்பாக்கியுடன் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிளை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு அவரிடமிருந்த யந்திரத்துப்பாக்கியை பறித்து மீண்டும் சுட்டதாகவும் எல்லோரும் கிலிகொண்டு ஓடவும் மற்றும் பலர் திகைத்து நிற்கவும் மற்றும் வாலிபர்களும் சேர்ந்துகொண்டு இரண்டு மூன்று நிமிடங்களுக்கிடையில் சகல அலுவல்களையும் முடித்துக்கொண்டு காரில் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

### வளாகவான் சேதம், சாரதி காயம்

யாழ்ப்பாண வளாகத்திலிருந்து வங்கிக்குப் பணம்பெறச் சென்ற மோட்டார்வான் வங்கியின்முன் நின்றதாகவும் இந்தக்கலவரத்தில் வானைச் செலுத்த சாரதி முற்பட்டபோது கொள்ளையர் வான்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் சாரதிக்குத் தோளிலும் கையிலும் காயம்ஏற்பட்டது வானின் டயர்வெடித்ததுடன் பொனற்றும், வான் கண்ணாடியும் சேதமடைந்தன.

### அபாயகட்டத்தைதாண்டினர்

வங்கிக்கொள்ளையில் காயமடைந்து ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டு அவசரச் சத்திர சிகிச்சைக்குள்ளான மற்றொரு ரிசேர்வ் கான்ஸ்டபிள் ஜெயரத்தினம் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்றும் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறாரென்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

### வீடுகள், வாகனம் சோதனை

திருநெல்வேலி மக்கள்வங்கிக்கிளையில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின்தொகை பதினொரு லட்சத்து எண்பதினாயிரமாக இருக்கலாமென்று நம்பப்படுகிறது. வங்கிக்கொள்ளையைத்தொடர்ந்து உரும்பராய், கொக்குவில், கோண்டாவில் மற்றும் பல இடங்களிலும் வீடுகளிலும் முக்கியமான சந்திகளிலும் வீதிகளிலும் வாகனங்களும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டுவருகின்றன.

### புதிய சிறைச்சாலைகள் நிறுவப்படும்

(கொழும்பு)

களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் அடுத்தாண்டில் புதிய சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்று நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் இன்று நீதி அமைச்சின் மான்ய ஒதுக்கீடுமீதான விவாதத்துக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### அரசஊழியர்...

அரசாங்க ஊழியர்கள் எந்த அரசியல் கட்சியின் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அவர்கள் தங்கள் கடமையை விசுவாசமாகவும் நேர்மையாகவும் செய்தால்போதும் அரசியல் கட்சிக் கொள்கைக்காகத் தண்டிக்கப்போவதில்லையென்று ராஜாங்க அமைச்சர் திரு.: ஆனந்ததிஸ்ஸ டி. அல்விஸ் ஆட்சிமன்றத்தில் கூறினார்.

### நிஹால் மீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் நீதியமைச்சின் செயலாளர் திரு நிஹால் ஜெயவிக்கிரம மீதான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணையை ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒத்திவைத்துள்ளது.

அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர் அவர் மீதானவிசாரணையைத் தாமதமின்றி நடத்துவது என்று ஆணைக்குழு முடிவுசெய்துள்ளது. (உ)

### கிழக்கின் உதவிக்கு வடக்கின் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கையில் சூறாவளியினாலும், பெருவெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரணப்பணியில் வடபகுதிமாணவர்களை ஈடுபடுத்துவது என்ற கிழக்கிலங்கை புனர்வாழ்வுக்கழக உதவிக்குழுவின் தீர்மானத்துக்கு பலத்த ஆதரவு கிடைத்துள்ளது

இத்தீர்மானத்தின்பிரகாரம் காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள யூனியன்கல்லூரி, மகாஜனக்கல்லூரி, அருணோதயக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மாணவர்களும். மானிப்பாய் தொகுதியிலிருந்து ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவர்களும் உடனடி நிவாரணப்பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இம்மாணவர்கள் அணிமூலம் நிதி பொருட்கள் அனுப்புவது இவர்களுக்கான இலவச போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழக உதவிக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இப்பணியில் ஈடுபடும் பொருட்டு ஏனைய சனசமூக நலன்புரிச் சங்கங்களுக்கும் இக்குழு அழைப்புவிட்டுள்ளது

இதேசமயம தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் சகல தொகுதிக் கூட்டணிக் கிளை அமைப்பாளர்களுக்கும் நிர்வாகசபையைக் கூட்டி பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகளில் ஈடுபடவேண்டுமென்றும் 50 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவும் இருவாரங்களுக்கு பாதிக்கப்பட்ட இடங்களில் தங்கியிருந்து பணி செய்யவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கா)

### 'அமிர்' ஜனாதிபதியுடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் சென்ற செவ்வாய்க்கிழமை நடந்த சம்பவங்கள்பற்றிப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு வேரப்பிட்டியாவுடனும் ஜனாதிபதியுடனும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதாகத் தெரியவருகிறது. (ம)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வவனியா நகர எல்லைக்குள் மன்னார் வீதியில் தண்ணீர், மின்சார வசதியுடன் மில் போடுவதற்கும், வீடு கட்டுவதற்கும் ஏற்ற இரண்டு ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 69/1, பஸார் வீதி, வவனியா. டெலிபோன்: 348. 0945

---

ஆடு மாடு கோழிக்கு சிறந்த உணவாகிய இப்பில்-இப்பில் கன்றுகள் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த கட்டைவேலி, மெதடிஸ்த ஆலயத்தில் விற்பனைக்கு உண்டு. ஒரு கன்றின் விலை 25 சதம். 0980

---

இருபாலை புதுரேட்டில் 10 பரப்புக் காணி, கிணறு பிரயோசனங்களுடன். விபரங்கட்கு திருமதி யோன்சன், 171, குருசோல்ற் வீதி, சுண்டிக்குளி. 0978

---

திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐஸ் பழக் கம்பனி ஒன்று முழுமையாக சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. S. செல்வத்துரை, கதிர்வெல்டிங்ஸ், டச்சுரோட், சாவகச்சேரி. 0989

---

பசளைக் களஞ்சியங்கள் அமைப்பதற்கான

### கேள்விப் பத்திரங்கள் கோருதல்

(முடிவுபெறாத வேலைகளைத் தொடர்ந்து முடிப்பதற்கு

இடங்கள்; கெருடாவில், அக்கராயன்குளம்.

தகுதி: கட்டிட நிர்மான வேலைகளில் அனுபவமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் வழங்குதல்: 20-12-78 பகல் 12-00 மனிக்கு முன்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றல்: 22-12-78 பிற்பகல் 2-00 மணி வரை.

கேள்விப்பத்திரங்களை ரூபா 10/- வைப்புப்பணமாகக் கட்டி கமநலச்சேவை கந்தோர் யாழ்ப்பாணச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அ. ஜெ. செந்தில்நாதன்**
உதவிப்பணிப்பாளர்,
கமநலச் சேவைப் பகுதி,
யாழ்ப்பாணம்
4-12-78. 0993

---

### கேள்விப் பத்திரங்கள்

1979 முதலாம் காலாண்டு

ஆஸ்பத்திரிகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பொருட்கள் விநியோகிப்பதற்கும், வாகன சேவைக்குமான கேள்விப்பத்திரங்கள் 1978-12-20-ந் திகதி பிற்பகல் 3 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களும், முழு விபரங்களும் சுண்டிக்குளி, பெரியகடை (யாழ்ப்பாணம்) சுன்னாகம், பருத்தித்துறை வல்வெட்டித்துறை காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவனியா ஆகிய மது விநியோகக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். கந்தசாமி,**
உதவி ஆணையாளர் விற்பனை அபிவிருத்தி திணைக்களம்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.
0987

---

## சுவீடன்குழு காரைநகர் விஜயம்

(காரைநகர்)

காரைநகர் ஊரி நல்லொழுக்க வாலிபர் சங்கத்தினர் ஊரிக்கிராமத்தில் மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக சுவீடன் தேச நல்லொழுக்கவாலிபர் சங்கக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. (உ)

---

காரைநகர்
ப. நோ. கூ, சங்கம்

### காரைநகர் தேவை

**லொறி றைவர், கிளீனர்**

காரைநகர் ப நோ. கூ. சங்கத்திற்கு லொறி றைவர், கிளீனர் தேவை. வயது 22-45 க்கும் உட்பட்டவர்கள், கடந்தகால அனுபவத்துடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் தலைவர் காரைநகர் ப. நோ. கூ. சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு 31-12-78க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்**
காரைநகர் ப.நோ. கூ சங்கம்
5-12-78 0995

---

காரைநகர்
ப. நோ. கூ. சங்கம்

### காரைநகர் சாக்கு விற்பனை

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் 15-12-78 நண்பகல் 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பொதுமுகாமையாளர்**
காரைநகர் ப.நோ. கூ. சங்கம்
5-12-78 0994

---

### கேள்வி விளம்பரம்

கிளிநொச்சிப் பட்டண சபை
கிளிநொச்சி

பரந்தன் சந்தையில் ஒரு மாட்டிறைச்சிக் கடை 01-01-1979ந் திகதி தொடக்கம் 31-12-79ந் திகதிவரை நடாத்துவதற்கான கேள்விகள் 11-12-78ந் திகதி காலை 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் முறையே கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் செலுத்துவதன் மூலம் 08-12-78ந் திகதி பி. ப 1-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு விசேட ஆணையாளர், பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கேள்வியின் இடது பக்கத்தின் மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிக்கப்பட்டு இருத்தல்வேண்டும். சென்ற வருடக் கேள்வியிலும் குறைந்த கேள்விகள் பரிசீலனைக்கு எக்காரணம் கொண்டும் எடுத்துக் கொளப்படமாட்டாது.

சென்றவருடக் கேள்வி
1. மாட்டிறைச்சிக் கடை இல 1 ... 18,959-47

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**விசேட ஆணையாளர்**
கிளிநொச்சிப் பட்டணம்

விசேட ஆணையாளரின் பணிமனை,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி. 1978-12-01
0997

---

நாளை ஆரம்பம்

## நல்லூரில் தியாகராஜ உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் தியாகராஜ உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நல்லூரில் ஆரம்பமாகிறது. இவ்வுற்சவம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். முதலிருதினங்களும் விழா பிற்பகலில் தொடங்கி நடைபெறும். 3ம் நாள் ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள் காலையிலிருந்து இரவு வரை நடைபெறும்.

நாளை வெள்ளி மாலை முன்னாள் நீதவான் கே. வி. நவரத்தினம் தலைமையில் நாதஸ்வரக் கலைஞர் என். எம் இராசதுரையின் மறைவு குறித்து அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்

மூன்றுநாள் உற்சவத்திலும் நாட்டின் பல பாகத்திலுமிருந்து கலைஞர்கள் பங்கு பற்றுவார்களென மன்றச் செயலாளர் திரு மு. இராமலிங்கம் தெரிவிக்கிறார். (அ)

---

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு இலுப்பையடி (வரம்பற்றை) வீரகத்தி விநாயகருக்கு லட்சார்ச்சனை நடைபெறவிருக்கிறது இம்மாதம் 15ம் திகதி லட்சார்ச்சனை தொடங்கி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும் பிரதிஷ்டா கிரியா கலாமணி சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள் பிரதிஷ்டாபிரதம குருவாகப் பணியாற்றுவார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வ. சொக்கலிங்கம் முதல் நாள் உரையாற்றுவார் இறுதி நாளன்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார். (அ)

---

## கிறிஸ்து அரசர் விழா

(உடுப்பிட்டி)

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'கிறிஸ்து அரசர்' விழா இம்முறை பருத்தித்துறையில் கொண்டாடப்பட்டது

பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டுப் பலிப் பூசையுடன் ஆரம்பமான இவ்விழா பருத்தித்துறை வலட்டி றோ. க. கனிஷ்ட உயர்வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளுடன் முடிவுற்றது

யாழ் மாவட்ட மறைக் கல்வி இயக்குநர் அருட் திரு. ஜே. நிக்கலாஸ் அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார் இவ்விழாவில் வடமராட்சிப் பகுதியில் உள்ள பதினொரு பாடசாலைகள் கலந்து கொண்டன.

---

### விளம்பரம்

**வழங்குநர்களை பதிவுசெய்தல்**

வழங்குநர்களைப் பதிவு செய்வது சம்பந்தமாகவுள்ள முழு விபரங்களுக்கும் 1-12-78ம் திகதிய டெயிலி நியூஸ் புதினப் பத்திரிகையைப் பார்க்கவும். மேலும் விபரங்களை கிராமசபைக் காரியாலயத்தில் கந்தோர்நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
**க. சபாபதிப்பிள்ளை**
விசேட ஆணையாளர்,
கிராமாட்சிமன்றம்,
நல்லூர்.

யாழ்ப்பாணம்.
4-12-78. 0996

---

யாழ். மாநகரசபையில்

## இருநூறு பேர் நிரந்தர மாதச்சம்பள ஊழியராகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையில் நிரந்தரநாட் சம்பள ஊழியராகவிருந்த இருநூறு பேர் நிரந்தர மாதச் சம்பள ஊழியராக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

டிசம்பர் 1-ம் திகதி முதல் இந்த ஊழியர்கள் நிரந்தர மாதச் சம்பள ஊழியராக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஊழியரின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் சில தினங்களில் இவர்களுக்குக் கடிதம் அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-அ)

---

## இன்றைய இராசிப்பலன்

கார்த்: மாதம் 21-ந் திகதி
வியாழக்கிழமை
(7-12-78)

**மேடம்:-** துஷ்டர்களின் உறவு உங்களை சங்கடத்தில் மாட்டிவைக்கும், பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

**இடபம்:-** மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொறாமைப்படும் அளவிற்கு முன்னேற்றமுண்டு, தாய்வழி மூலம் தலைச்சிறப்புக்கு இடமுண்டு, சிறப்பான தினம்.

**மிதுனம்:-** செய்தொழிலால் சிறப்புண்டு, மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும், புத்திரர் புகழுக்கும் இடமுண்டு, உற்சாகமான தினம்.

**கடகம்:-** முன்னேற்றம் தடைபடும், சதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ளவும் நேரிடும், அமைதி நன்று.

**சிங்கம்:-** களஸ்திர வழியில் பெருமைகள் வந்து சேரும், போதுமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள், சுகபோக நாள்.

**கன்னி:-** பிரயாணத்தில் பொருள் தவறக்கூடும், சிலருக்கு உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம், புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

**துலாம்:-** தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் ஆர்வம் பிறக்கும், பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொது மக்கள் ஆதரவும் கிடைக்கும்.

**விருச்சிகம்-** ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம், கலைஞர்களுக்கு நல்ல தினம், கடமையிலும் ஆர்வம் பிறக்கும்.

**தனுசு:-** வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும், சில நாட்களாக நிலவிவந்த தயக்கநிலையில் நல்ல திருப்பம் ஏற்படும், முன்னேற்றமான தினம்.

**மகரம்:-** தானியத்துறையில் நஷ்டமேற்படும், கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூள முடியும், கூடன் தொழிலாற்றுவோர் உளவு வேலையில் இறங்கக்கூடும்.

**கும்பம்:-** வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கலாம், நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றக்கூடும், எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

**மீனம்:-:** முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார், அடக்கமான நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

---

## "டாக்டர்கள் வெளியேறக் காரணம்"

[கொழும்பு]

"வைத்தியர்களுக்கு கிடைக்கின்ற குறைந்த சம்பளமும், வசதிக்குறைவுகளுமே அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லக் காரணமாகும்"

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சு மானியம் மீதான பரிசீலனையின் போது பேசுகையில் கூறினார்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக வெகு தொலைவிலுள்ள மகரகமைக்கு வரவேண்டியிருப்பதால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கோபோல்ட் சிகிச்சைக்கருவியொன்று பொருத்தப்படவேண்டியது அவசியமென்று திரு. யோகேஸ்வரன் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நவீன சத்திர சிகிச்சை நிலையம் ஒன்று அவசியமெனக் கூறிய திரு. யோகேஸ்வரன் இப்போதுள்ள 148 அம்புலன்ஸ் வண்டிகளில் வண்டிகளில் ஒன்றையாவது சுகாதார அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**கம்பஹா எம். பி. கருத்து**

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா பேசுகையில், "அரசாங்கம் அக்யுபங்சர் முறையை இலங்கையில் வளர்ப்பதற்கு எடுத்து வரும் நடவடிக்கையினைப் பாராட்டுகிறேன். மேற்கு நாடுகள் கூட இன்று கீழைத் தேச வைத்திய முறைகளையே பின்பற்றுகின்றன" என்றார். [உ]

---

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கனிஷ்டபிரிவு வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி என். கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ)

---

## வவனியா அகதிகள் முகாம்களுக்கு ...

(யாழ்ப்பாணம்)

வவனியாப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு மரவள்ளிக்கட்டைகள் பெருமளவில் தேவைப்படுவதால் இலவசமாகக் கொடுத்துதவவிரும்புவோர் யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தாருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (உ)

## ஈழநாடு
The Eelanaadu

### யாழ்ப்பாணச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் சென்ற செவ்வாய்க்கிழமை பகலில் நிகழ்ந்த படுகொலையும் பயங்கரக் கொள்ளையும் யாருக்கும் நிச்சயம் மகிழ்ச்சியளிக்க முடியாது.

பட்டப்பகலில் அந்த வங்கிக் கிளையில் சுமார் பத்து லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப் பட்டிருப்பதுடன் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கோரமாகக் கொலைசெய்யப் பட்டிருப்பதும் பொலிசாரிடமிருந்த ஆயுதங்களைப்பறித்து அவர்களைக் கொலைசெய்து கொள்ளைப் பணத்துடனும் ஆயுதங்களுடனும ஓடித் தப்பிவிட்டதுய கவலையளிப்பதாகும்.

'சிக்காகோ' பாணியில் இந்தக் கொலையும் கொள்ளையும் நடைபெற்றிருக்கிறது. சமீபகாலமாக யாழ்ப்பாணப் பகுதியிலும் நாட்டின் இதர பல பகுதிகளிலும் கொலை கொள்ளைகள் போன்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவருவது நாட்டின் எதிர்காலம்பற்றி அச்சத்தைத் கொடுப்பதாகும்.

திருநெல்வேலி வங்கிக் கிளையில் நடந்த கொலையையும் கொள்ளையையும் துப்புத்துலக்கி அதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துக் கடுமையான தண்டனை பெறுக்கொடுத்து இதுபோன்ற சமூகவிரோதச் செயல்கள் இனிமேலும் நடைபெறுதவாறு தடுக்க வேண்டியது காவற்படையினரான பொலிசாரின் கடமை அவர்கள் இந்தப் பொறுப்பையும் கடமையையும் சரிவரச் செய்வார்களென்று நம்பிக்கையும் மக்களுக்கு உண்டு நம்நாட்டுப் பொலிசாரின் திறமையும் பயிற்சியும் மற்றைய நாடுகளுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல.

ஆனல் பொலிஸ் சேவையைச்சேர்ந்த ஒருசிலர் சில சமயங்களில்தம்மை மறந்து நடந்துகொள்வதால் பொலிஸ் சேவையில் திறமையுடனும் பொறுப்புடனும் நடந்துகொள்பவர்கள் மீதுகூடப் பொதுமக்களின் நம்பிக்கை வைக்கத் தயங்கும நிலை ஏறபடுகிறது.

எந்தக் குற்றச் செயல்களையும் துப்புத்துலக்கிக் கண்டுபிடிப்பதற்குப் பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் பொலிசாருக்கு அவசியம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பொலிசார் எந்த அளவுக்குப் பெறமுடியுமோ அந்த அளவுக்குக் குற்றச் செயல்களைக்கண்டு பிடிப்பதிலும் தடுப்பதிலும்வெற்றி கிடைக்கும்.

திருநெல்வேலி வங்கிக் கிளையில் நடந்த துர்ப்பாக்கிய நிகழ்ச்சி மனவேதனையைக் கொடுத்த அதேநேரத்தில அன்று மாலை யாழ்ப்பாணம் பெரியகடைப்பகுதியில் சிறிதுநேரம் நடந்த சம்பவம் பெரும் வேதனையையும் மக்களுக்கு பாதுகாப்பே இல்லையா என்ற அச்சத்தையும் ஐயத்தையும் ஏற்படுத்திவிட்கொள்ளவைத்தது.

சில் உடையில்பொலிஸ் கோஷ்டியொன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும் பெரியகடைப் பகுதியிலும் வாகனங்களையும் பொதுமக்களையும் கடைகளையும் தாக்குவதாகவும் பொதுமக்கள் கிலிகொண்டு நாலாபக்கமும் சிதறிஓடினார்களென்றும் அரசாங்க அதிபருக்குப் பலரும் புகார் செய்தனர். முன்னைய சம்பவங்கள் மீண்டும் ஏற்பட்டுவிடுமோ என்று அவர்கள் அஞ்சியதில் தவறில்லை.

அரசாங்க அதிபர் திரு. யனல் பெர்னண்டோ உடனடியாக அந்த இடங்களுக்குச் சென்று நிலைமையைச் சமாளித்து அமைதியை நிலைநாட்டி மக்களுக்கு நிம்மதியளித்தார்

அரசாங்க அதிபரைப் பொதுமக்கள் நிச்சயம் வாழ்த்துவார்கள். நாமும் அவரைப் பாராட்டுகின்றோம்.

இதேசமயம் அரசாங்க அதிபர் அன்று வெளியூருக்குச் சென்றிருந்தாலோ கொழும்பில் ஒரு மாநாட்டுக்குச் சென்றிருந்தாலோ நிலைமை என்னவாகியிருக்கும்?

இது போன்ற சம்பவங்கள் இனியும்நிகழ-எத்தனிக்கக்கூட சிந்திக்காதவாறு-தகுந்த நடவடிக்கைஎடுக்கப் படவேண்டியது அவசியம்.

## அக்கரைப்பற்றில் மக்கள் கேட்டார்கள்

# உதவிப்பொருள்கள் எங்கே போகின்றன?

நேற்றைய தினம் குறிப்பிட்டிருந்தபடியே இடுகுகள் அனுப்பவும், பாதிப்புற்ற அப் பகுதிகளுக்குச் சென்று நிவாரணப்பணிகளில் நேரடியாக ஈடுபடவும் இயலுமான ஒவ்வொருவரும் ஏற்றவிதத்தில் துரிதமாக செயல்படுவீர்கள். இதற்கு வாய்ப்பாக அமைப்புக்களும் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவைதான் நமக்கான இக் கடமைகளை நிறைவுசெய்ய வாய்ப்பளிக்கும்.

இனி,வழிப்பயணத்தைத் தொடர்வோமா?

வழிப்படுத்துபவைகள் ஆற்றுப்படைகள்.

இந்த வழிப் பயணமும் ஒரு மனித ஆற்றுப்படையாகுமோ?

கடந்த வியாழன்; காலை 5-35 மணிக்கு தெகிவளையில் நான் நின்றுகொண்டிருந்த இடத்தருகே வந்து நின்றது 'ஜீப்' வண்டி.

நானும் ஏறிக்கொண்டேன். மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், மன்னார் எம். பி. திரு. பி எஸ். சூசைதாசன் உடுப்பிட்டி எம் பி. திரு. ரி ராஜலிங்கம் ஆகியோருடன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கான இணைப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். ரவீந்திரனும் ஜீப்பினுள் இருந்தார்.

மன்னார் எம். பி. தான்சாரதி; 'ஜீப்' தர்மருடையது.

பாணந்துறை, ஹொரண, இரத்தினபுரி, ஹப்புத்தளை, வெள்ளவாயா, மொனருகலை ஊடாக பொத்துவிலை நோக்கி நாம் சென்றுகொண்டிருந்தோம்.

இரத்தினபுரியில் காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கொஞ்சம் பணிவரம் வாங்கிக் கொண்டோம்.

கொஸ்லந்தையை அடைந்ததும் மரக்கறியும் வாங்கினோர்கள்.

அரிசியோ, மரக்கறியோ, எதுவோ கையிலின்றி எவராவது சும்மா இன்று அங்கு செல்வார்களா, என்ன?

மரக்கறி வாங்கிக்கொண்டிருந்தசமயம் எனக்கு உடனே கவிதை ஒன்றுதான் ஞாபகத்துக்கு வந்தது.

''பிறநாட்டு வணிகர் வந்து
பெரும்பொருள் ஈட்டிச் செல்ல
திறல்நாட்டு வணிகன் மைந்தன்
திருவினைத் தேடற் கென்று
புறநாட்டிற் போன வந்நாள்
பூம்புகார் வரலாற் றின்கண்
கறைபட்ட ஒருநாள் துன்பக்
கண்ணீரைத் துடைப்ப தென்றோ''?

1968ல் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி நடைபெற்ற 'புகாரில் ஒருநாள்' என்ற தலைப்பிலான கவிதைப் போட்டியில் முதற் பரிசைப் பெற்ற கவிஞர் ஏ. சண்முகதின் கடைசிக்கவிதை இது.

### நமதுநிருபர் மாலி

-என்னை வெருவாகவே கவர்ந்திருந்தது இக் கவிதை.

பிறநாடுகளிலிருந்தெல்லாம் வணிகர்கள் பூம்புகாருக்கு வந்து பொருளீட்டிச்செல்ல, பூம்புகாரில் பிறந்த கோவலனோ பொருள்தேடுதற்காக பூம்புகாரை விட்டு வேறு நாடு போகிறான்; அவன் புறப்பட்டுச் சென்ற அந்நாள் பூம்புகார் வரலாற்றிலேயே கறைபட்ட ஒருநாள்'- என்று அவர் கூறுவது உள்ளத்தையே தொடவில்லையா?

அப்படித்தான், போவோரெல்லாம் அங்கிருந்து அரிசி கொண்டு செல்லும் மட்டக்களப்புக்கு, இன்று வேறெங்கெல்லாமோ இருந்து அங்கு அரிசி கொண்டு செல்லும் நிலை உருக்கமாகவில்லையா; என்ன?

நாம் மரக்கறி வாங்கிக் கொண்டிருந்தபோது ஒருவர் வந்து; ''எங்கே மட்டக்களப்புக்கா போகிறீர்கள்?'' என்றார் தர்மரைப் பார்த்து.

- அவர் அங்கு ஒரு வர்த்தகர்.

சோடா உபசாரமும் அளித்தார்.

மறுதினம் அங்குள்ள தமிழ் வர்த்தகர்களெல்லாம் லொறியொன்றில் உணவுப்பொருள்களை மட்டக்களப்புக்கு அனுப்பவிருப்பதாகவும் தெரிவித்தார்.

- வெள்ளவாயாவைத் தாண்டி, சுமார் 80 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றுகொண்டிருந்தது 'ஜீப்'.

நேரமும் நண்பகல் 12 மணியைத் தாண்டியிருந்தது திடீரென்று ஜீப்பின் பின்புற 'டயர்' ஒன்று காற்றுப் போய்விட்டது!

- நல்ல வெயில்!

இருந்த மேலதிக 'டயரை' மாற்றிக்கொண்டு, அடுத்திருந்த புத்தள என்ற கிராமத்தில் ஓட்டையான 'ரியூப்பை'யும் ஒட்டிக்கொண்டோம்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இவற்றில் செலவாயின.

### நூறு தேசிக்காய் ரூபா 12-50

மொனருகலையைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கையில் வீதியில் விற்பனைக்காக தேசிக்காய் வைத்திருந்தார்கள்.

நூறு காய் பன்னிரண்டு ரூபா

யாழ்ப்பாணத்தில் ஒரு தேசிக்காய் 50 சதம் விற்கிறது என்றார் யோகேஸ்.

- நூறு காய் வாங்கியாயிற்று

சுமார் 4-15 மணிக்கு பொத்துவிலை அடைந்தோம். இரத்தினபுரியில் வாங்கிய பணிசும் கொஸ்லாந்தையில் வாங்கிய கரும்பு வெல்லமும் அப்போது மீதமிருக்கவில்லை.

அறுகம்குடா வாடி வீட்டில் மதிய போசனமும் மாலை சிற்றுண்டியுமாக சேர்த்து ஒரு சாப்பாடு.

தேநீரையும் முடித்துக் கொண்டு மீண்டும் பொத்துவிலுக்கு வந்தோம்.

மட்டுநகர்ப் பகுதிகளின் துன்பியல் காட்சிகளின் எதிரொலிகள் அங்கு ஒலித்தன; பலரும் கூறினார்கள்.

- 'கண்ணால் பார்க்கமுடியாது' என்றார்கள்.

பொத்துவிலில் குறிப்பிடத்தக்கதாக தாக்கமெதுவும் இல்லை.

சில வீடுகளின் கூரைகள் சிறிதளவு சேதமடைந்திருக்கின்றன.

மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினத்தின் வீட்டுக்கூரையும் வீசப்பட்டதாக அங்கு சென்றபோது கூறினார்கள்.

ஒரு விடயத்தை மட்டும் பலரும் அங்கு பிரஸ்தாபித்தார்கள்.

'உணவு முழுவதும் அம்பாறைக்கே செல்கிறது. மட்டக்களப்பு மற்றும் பகுதிகளுக்கு உணவே இல்லை: பெரிதும் கஷ்டமுறுகிறார்கள் என்றனர்.

பொத்துவிலிருந்து டிராக்டர், லாறிகளில் உணவு அனுப்பப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

ஒவ்வொரு தினமும் நாம் 5 ஆயிரம் ரூத்தல் உணவு அனுப்புகிறோமே என்றார் திரு ரவீந்திரன்.

-அதென்னவோ தெரியாது; இப்பகுதிகளில் எதையுமே காணோம் என்றே அவர்கள வற்புறுத்தினார்கள்.

நாம் புறப்பட்டோம்.

''இரவுச் சாப்பாட்டை அக்கரைப்பற்றிலேயே முடித்துக் கொள்ளுங்கள், அல்லாவிட்டால் அதற்கப்புறம் சாப்பாடு எங்குமே கிடையாது' என்று எச்சரிக்கை ஒன்றையும் எமக்கு விடுத்தார்கள் அவர்கள்

அக்கரைப்பற்றை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையிலேயே முறுக்கி சரிக்கப்பட்டுள்ள தந்திக்கம்பிகளை வீதிகளில் கண்டேன்.

சின்னமுகத்துவாரத்தையடுத்துள்ள பாலமொன்றில் கடல் மணல் பல அடிகள் உயரத்துக்கு பாலத்தை மூடியிருந்தது.

வாகனம் போகக்கூடிய அளவுக்கு மட்டும் அம்மணல் அகற்றப்பட்டிருந்தது.

கடலால் அடித்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது அந்த அளவு மணல்!

அக்கரைப்பற்றை அடைந்தபோது அந்தி மயங்கிக் கொண்டிருந்தது

'ஜீப்'பை நிற்பாட்டி இறங்கியதும் பலர் சூழ்ந்துகொண்டார்கள்.

பல விதமான குரல்கள் அங்கு எழுந்தன.

''அமிர்தலிங்கம் வந்தவர்: இந்தப் பக்கம் வந்து பார்க்க அவரால் முடியவில்லை'' என்றார் ஒருவர் ஒருவிதமாக.

[7-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

எப்பொருளிலும் யாரிடத்திலும் ஒருபொழுதும் பற்றுதல் வையாதே.
—சுவாமி சிவானந்தர்

### நாடு நடப்பு

பஸ் கண்டக்டர் வேலை நல்ல வருமானம் தரும் என்று ஒருவர் முன்பொருதடவை சொன்னது எவ்வளவு உண்மையென்பதை சென்றவாரம் கொழும்பு நகரில் பஸ்களில் பிரயாணம் செய்தபோது அறிந்து கொண்டேன்

'சில்லறையுடன் ஏறுங்கள்'' என்று சில கண்டக்டர்கள் பஸ்ஸில் ஏறும்போதே சில இடங்களில் குரல் கொடுக்கிறார்கள் கணக்காகப்பணத்தைக் கொடுத்து டிக்கட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பஸ்களிலும் அறிவித்தல் போடப்பட்டிருந்ததும் உண்மையே!

சில்லறைக்கு இப்போது கொழும்பில் பெரும் தட்டுப்பாடு அலுமினியத்தில் புதிதாக 5 சத 10சத நாணயங்களும் ஒருசத இரண்டு சத நாணயங்களும் டதிதாகப் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ள போதிலும் ஒரு சதம் இரண்டு சதம் அளவுக்கு 5, 10 சத நாணயங்கள் அதிக அளவில் இல்லை

பித்தளை 5 10 சத நாணயங்களைக் கண்ணால் பார்ப்பது அரிதாகிவிட்டது.

ஒரு நாள் மூன்று பஸ்களில் நான் ஏறி இறங்கவேண்டியேற்பட்டது. அன்று எனக்கு 30 சதம் நஷ்டம் ஒரு நாள் மட்டும் தான் இதைக் கணக்குப்பார்த்தேன். கணக்குப் பார்க்காமல் நான் கொடுத்த பணம் இன்னும் அதிகம்.

பம்பலப்பிட்டியிலிருந்து கோட்டைக்கு இப்போது பஸ் கட்டணம் நாற்பது சதம். ஐம்பது சதத்தைக் கொடுத்ததும் கண்டக்டர் பதினைந்து சதம் இருக்கிறதா என்று கேட்டார். ''இல்லை'' என்றதும் சில்லறை இல்லை என்று சொல்லிவிட்டு ''வேறு டிக்கட்'' என்று கேட்டுக் கொண்டே அப்பால் நகர்ந்தார்.

கொடுத்தது ஐம்பது சதம். டிக்கட் கட்டணம் நாற்பது சதம். பத்துச்சதம் அவருக்கு!

இப்படி ஒரு நாளைக்கு எத்தனை ரூபாய் சேரும்!

சம்பளம், மேலதிகவேலை நேரச் சம்பளம் போக இப்படிச் சில்லறை வருமானமும் கிடைக்கிறது.

பஸ் கண்டக்டர் வேலை நல்ல சம்பாத்தியம் தருவதுதான்!

இது பற்றி ஒரு பஸ் கண்டக்டரிடம் சொன்னபோது, கண்டக்டர் வேலையும் சும்மாவா கிடைத்தது? 'என்று பதிலுக்குக் கேட்டார்.

ஃ ஃ

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாலகாவலர் திரு கனகராஜா உதவி அளித்து வருவதுடன் இங்கு சேகரிக்கும் பொருட்களை அங்கு கொண்டு செல்வதற்கு வாகனவசதி கேட்ட யாழ். வளாக மாணவர் மன்றத்தினருக்கும் வங்கி ஊழியருக்கும் தமது நிறுவனத்தின் இரண்டு லொறிகளையும் கொடுத்துதவியிருக்கிறார் தாலகாவலரும் அங்கு நேரில் சென்று உதவத் திட்டமிட்டிருக்கிறார்.

ஃ ஃ

வெள்ளவத்தையிலுள்ள ஒரு படமாளிகையின் உதவி மனேஜர் சென்ற திங்கட் கிழமை வங்கியில் பணம் போடுவதற்காக வெளியே செல்லும் போது அவரிடமிருந்த பணத்தைக் கொள்ளையடிக்க பெல்பொட்டம் அணிந்த ஒரு வாலிபரும், சாரமணிந்த மற்றொருவரும் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டு அவர்களை படமாளிகை ஊழியரும் மற்றும் இரு பொலிசாரும மடக்கிப்பிடித்து மூன்றுவது சைக்கிள் பேர்வழியையும் கைது செய்திருக்கின்றனர். உதவி மனேஜா கத்திக்குத்திற்குள்ளானாலும் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டது.

கொலையும், கொள்ளையும் இப்போது அதிகரித்து வருகிறது. இதற்கு என்ன காரணம்?

- ஊர்சுற்றி

## சம்பளப்பணம் கொள்ளை:

# பிணைபற்றி 15ந்திகதி தீர்ப்பு;

## மூவர் கொழும்புச் சிறைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மகளிர் கல்லூரிச் சம்பளப்பணக்கொள்ளை வழக்கில், சந்தேகநபர்களை பிணையில் விடுதலைசெய்வது பற்றி இம்மாதம் 15ம் தேதி தீர்ப்பளிக்கப்படும் என பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சந்தேகநபர்களை பிணையில் விடுதலைசெய்வது பற்றிய முடிவை அறிவிக்குமாறு நீதவானிடம் கேட்டுக்கொண்டார்.

இவ்வழக்கு தொடர்பாக பொலிஸார் என்ன நிலையில் இருக்கின்றார்கள் என்பதை அறிவிக்கவேண்டுமெனக்கூறிய நீதவான் இம்மாதம் 15ம் தேதி பிணை பற்றிய முடிவை தெரிவிப்பதாக கூறினார்.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த 3 சந்தேகநபர்களை அவர்களின் வசதிக்காக கொழும்பு சிறைச்சாலைக்கு மாற்றுவதாகவும் நீதவான் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி பொன்னம்பலம் [ஜூனியர்], ஆர். சிறிசிவாயா, ஆர். பரமகுரு, எம். வேலும்மயிலும், சிவாபாலேந்திரா, கனகமனோகரன், என். கிருஷ்ணராஜா, கே இரத்தினசிங்கம், திருமதி அருச்சுனா. எஸ் இராமச்சந்திரன், வி. அருமைநாயகம், எம். இராசகுலேந்திரன், வி. யோகசிகாமணி, அ சிறிதரன் ஆகியோர் ஆஜரானார்கள். [க]

---

உங்கள் பங்கைச் செலுத்திவிட்டீர்களா?

'ஈழநாடு' ஆதரவுடன்

ரோட்டரி ஆரம்பித்த

# சூறாவளி, வெள்ள நிவாரண நிதி

இன்னும் மூன்றே நாட்கள்தான் உண்டு

சூறாவளி வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கம் 'ஈழநாடு' ஆதரவுடன் நிதியொன்றை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

இதன் மூலம் சேகரிக்கப்படும் பணம் சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள ரோட்டறிச் சங்கங்களிடம் உடனடி உதவிகளை செய்யும்பொருட்டுக் கையளிக்கப்படும்.

இந்நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள்

'ரோட்டரிச் சங்கம் யாழ்ப்பாணம்'
மே / பா. ஈழநாடு லிமிட்டெட்
த. பெ. எண். 49,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியிட்டு காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கொடுப்பனவுகள் யாவற்றுக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

இந்நிதி சேகரிப்பு 10-12-78ம் திகதியுடன் முடிவடையும்.

4-12-78 வரை இந்நிதிக்குக் கிடைத்த தொகை ரூ. 5756-00

பின்னர் அனுப்பியவர்கள் விபரம் வருமாறு:-

டாக்டர் எஸ். சண்முகலிங்கம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் ரூ. 100-00

ஓர் அன்பர், உரும்பராய் மேற்கு. ரூ. 30-00

[நிதி அனுப்புவோர் பெயர் விபரம் அவ்வப்போது வெளியிடப்படும்.]

---

## ஜே. பி.யாக சத்தியப்பிரமாணம்



(வட்டுக்கோட்டை)

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த திரு ஆ மகாலிங்கம் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுஊர்காவற்றுறை நீதவான் திரு. வி. ஜெகசோதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் இவர் சிறந்த சமூக சேவையாளரும், காரைநகர் வடக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் உபதலைவருமாவார்.

சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு வந்தபோது நீதிமன்ற வாசலில் இவரை காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. ச கதிரவேலு. சமூகசேவையாளர் திரு எஸ். முத்தையா உட்பட ஏராளமான பொது மக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களும் வரவேற்றனர். தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு இவரைச் சிபார் செய்திருந்தார். (அ)

---

## ஒரு வயதுக் குழந்தையை பரிதவிக்கவிட்டனர்

(கொழும்பு)

ருகம ரயில நிலையத்தில் ஒருவயதுக் குழந்தை ஒன்று அனாதரவானநிலையில் காணப்பட்டது.

வேண்டுமென்றே இக்குழந்தை கைவிடப்பட்டிருக்கலாம் எனப்பொலிசார் கருதுகின்றனர். [உ]

---

## பாடசாலைபஸ்சேவை: பெற்றோர் அதிருப்தி

(புலோலி)

மழைகாலங்களில் கப்புதாவில் ஆரம்பித்து மந்திகை வராத்துப்பளை ஊடாகச் செல்லும் பாடசாலை பஸ் சேவை சேவையிலீடுபடுத்தப்படாமையாலும் மழை அல்லாத நேரங்களிலும் நேரபதாழ்த்தி வருவதனாலும் பாடசாலைப்பிள்ளைகள் பெரும் அவதிக்குள்ளாகிவருகின்றனர்.

பருத்தித்துறை இ. போ. ச டிப்போவைச் சேர்ந்த இப்பாடசாலை பஸ்சேவை பெற்றோரின் அதிருப்திக்குள்ளாகியுள்ளது புலோலி வராத்துப்பளை கற்கோவளம் நெல்லண்டை தும்பளை போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைப்பிள்ளைகள் முக்கியமாக மாணவிகள் இந்தச் சேவை திடீரென நிறுத்தப்படுவதனாலும் நேரத்திற்கு நடைபெறாதபடியாலும் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பது மாத்திரமன்றி பலகஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர் எனவே இம் மாணவ மாணவிகளின் இக்குறைபாட்டை நீக்க வேண்டுமென பருத்தித்துறை ஈஸ்வரா இளைஞர் நன்னெறிக்கழகத் தலைவர் திரு சு திருச்செல்வம் கப்புதூ கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு,கே. தியாகராசா ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து இ. போ. ச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். [அ]

---

## சங்காபிஷேகம்

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரா கோவில் நவோத்தர சஹஸ்ரசங்காபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது. [உ]

...

## புதிய பஸ்சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

(நெல்லியடி)

கிளிநொச்சியிலிருந்து பதுக்காட்டுச் சந்தி, முருகன் சேணிச் சந்தி, நாகர்கோவில் ஊடாக பருத்தித்துறைக்கு ஒரு பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பச்சிலைப்பள்ளி மக்கள் கிளிநொச்சி இ போ ச டிப்போ முகாமையாளர் திரு எஸ் சிறிஸ்கந்தராஜாவை மகஜர் மூலம் கோரியுள்ளார்கள்.

இச்சேவை ஆரம்பிக்கப்படுமானால் வடமராட்சிப் பகுதியிலுள்ள விவசாயிகளும் மீனவரும் தமது உற்பத்திப் பொருட்களை கிளிநொச்சிச் சந்தைக்கு எடுத்துச்செல்ல மிகவும் வசதியாக இருக்குமெனவும் அம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது [அ]

...

## தந்திக்கம்பி திருடினாராம் சந்தேகநபர் விளக்கமறியலில்

[புலோலி]

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த நாகர்கோவிலில் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான தந்திக்கம்பியைத் திருடிக்கொண்டிருந்தாராம் ஒருவர். பருத்தித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகரா தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்ததையடுத்து இக்களவு பிடிபட்டதாம்.

கைது செய்யப்பட்ட புலோலி கிழக்கு வராத்துப்பளையைச் சேர்ந்த நபரிடமிருந்து திருடப்பட்டதாகக் கருதப்படும் 11,000 ரூபா பெறுமதியான தந்திக்கம்பிகளை மீட்ட பொலிசார் சந்தேகநபரைப் பருத்தித்துறை நீதவான் திரு கே ஞானச்சந்திரன் முன்னிலையில ஆஜர் செய்தபோது, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (அ)

---


## BMC உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு......

டிசம்பர் மாத இறுதியில், உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்வதற்கு 15-12-78க்குமுன் 50வித முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

24 SRI BMC 6 சிலின்டர் என்ஜின் கியர் பொக்ஸ்

22 SRI BMC 6 சிலின்டர் என்ஜின் கியர் பொக்ஸ்

என்ஜின்கள் இங்கிலாந்திலிருந்து ''ஜலன்திரங்'' கப்பலில் வந்துகொண்டிருக்கின்றன.

ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்க

வர்த்தக விசாரணைகள் :

**எஸ். சிவராஜா**

மே / பா. மேர்க்கன்டைல் கிறடிட் லிமிட்.,
மொம்ஸாக் பில்டிங், யாழ்ப்பாணம்.

தலைமையகம் :
யூனைட்டெட் ஜெனரல் மோட்டர்ஸ்
250, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு - 10.

## BMC உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு......

எதிர்வரும் மாசிமாத இறுதியில் விநியோகிப்பதற்கான ஓடர்கள் வரவேற்கப்படுகின்றன.

50 வித முற்பணம் செலுத்திப் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| 24 SRI BMC 6 சிலிண்டர் என்ஜின் கியர் பொக்ஸ் (இலங்கை ரூபாய்ப்படி) | ரூபா 12,350-00 |
| 22 SRI BMC 6 சிலிண்டர் என்ஜின் கியர் பொக்ஸ் (இலங்கை ரூபாய்ப்படி) | ரூபா 10,750 00 |
| டிப்பறன்சல்...... BMC | ரூபா 9,975-00 |
| கியர் பொக்ஸ்... BMC | ரூபா 2,975-00 |
| மொறிஸ் மைனர் 1000. | |
| கியர் பொக்ஸ் (மைனர் 1000) | ரூபா 2,555-00 |
| டிப்பறன்சல் (மைனர் 1000) | ரூபா 2,975-00 |
| ஒஸ்ரின் கேம்பிறிஜ் A55. | |
| கியர் பொக்ஸ் (A 55) | ரூபா 2,895-00 |
| டிப்பறன்சல் (A 55) | ரூபா 3,850-00 |

0998

## ஆசிரியருக்குக் கடிதம்:

# யாழ். கல்லூரிகளுக்கிடையில் நடந்த உதைபந்தாட்டம்

யாழ். பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி 1977 ஆம் ஆண்டில் நடைபெறுமையால் மனஞ் சலித்திருந்த இரசிகர் குழாம் இவ்வாண்டு அவை நடத்தப்படுவதை அறிந்து. போட்டிகளைச் சென்று பார்த்துக்களித்துத் தம் ஆவலையும், ஆர்வத்தையும் பூர்த்தி செய்து கொண்டிருந்தது. போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்த வேளையில், இறுதியாட்டமும், வெற்றிக் குழுவுக்கான தெரிவும் எப்போது நிகழும் என எதிர்பார்த்திருந்த இரசிகர் குழாம் பெரிதும் ஏமாற்றம் அடையும் வகையில் போட்டியாட்டங்கள் தடைப்பட்டு நின்றுவிட்டன. ஒரு கல்லூரி தன்னோடு விளையாடி வென்ற மற்றைய கல்லூரி விளையாட்டு வீரர் ஒருவரது தகுதியின்மை குறித்து ஆட்சேபனை எழுப்பியதே அதற்குக் காரணம்.

"குறிப்பிட்ட அந்த விளையாட்டு வீரர் கல்லூரியிற் கல்வி கற்கும் தகுதியை இழந்தவர்'' என்பதே ஆட்சேபனைக்கு எடுத்துக்காட்டிய கருத்தாகும்.

இந்த ஆட்சேபனை பல பிரயத்தனங்களின் மேல் இறுதியாக அமைந்த யா. பா. வி. சங்கப் பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க விடப்பட்டு, அதிக வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதென யாம் அறிகின்றோம். இதனால் குறிப்பிட்ட அவ்வீரரைக் கொண்ட கல்லூரிக் கோஷ்டி தொடர்ந்து விளையாடாதவாறு தடுக்கப்பட்டு விட்டது.

இவ்விடம் தொடர்பாக இரசிகர் குழாமும், பொது மக்களும் சிறிதும் புரிந்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆட்டத்தைத் தொடரவிடாமற் தடையுண்ட கல்லூரி தான் சேர்ந்திருந்த பிரிவில் தன்னோடு போட்டியிட்ட மற்றைய கல்லூரிகளை வென்ற போது இந்த ஆட்சேபனை எழுப்பப்படாதது ஏன்?

எழுப்பப்பட்ட ஆட்சேபனையை யா. பா. வி. சங்கச் செயலவை விசாரித்துத் தீர்மானம் எடுக்க முடியாமையும், அதன்மேல் குறிப்பிட்ட இரு கல்லூரி அதிபர்களும் செயலவை அங்கத்தவர் சிலரும் அமைத்த குழுவினால் தீர்மானிக்கப்பட முடியாமற் போனமையும் பொதுச்சபையே அந்த முடிவை வாக்கெடுப்பின் மூலம் நிர்மானிக்க நிகழ்ந்தமையும் ஏன்?

வாக்கெடுப்பின்போது, சில கல்லூரிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் நின்றும் வாக்களிக்காமலே நீங்கச் செய்ததேன்?

ஒரு மாணவன் கல்லூரியிற் கற்குந் தகுதியை நிர்ணயிப்பதற்கு யா. பா. வி. சங்கத்துக்கு உரிமை உண்டா? இவ்வாறாய்ப் பல சந்தேகங்களுக்கிடமாய் இரசிகர் குழாமும். பொதுமக்களும் நிகழ்வனவற்றைக் கேட்டுக் கேட்டு மயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விஷயமாக நிகழ்ந்த ஆரம்ப நிகழ்ச்சிகளை இங்கு குறிப்பிடுவது நன்றெனக் கருதுகிறோம்.

போட்டிகளை ஏற்பாடு செய்யுமுன் யா. பா. வி. சங்கம் தனது இழுவொன்றைக் கல்லூரி தோறும் அனுப்பி வைத்து, போட்டியிற் கலந்து கொள்ளவிருக்கும் வீரர்களது தனிப்பட தகுதிகளைப் பார்வையிடச் செய்தது.

அங்ஙனம் சென்ற குழுவினர் உதைபந்தாட்ட வீரர்களெனக் கல்லூரிகள் குறித்தனுப்பிய மாணவர்களைத் தம்முன் நேர்முகமாக அழைத்து, அவர்களது பிறப்புச் சான்றிதழ், உருவப்படம் முதலாய தாம் தெரிந்து கொள்ளவேண்டிய விபரங்களையெல்லாம் பரிசிலனை செய்து ஒத்துக்கொண்டனர். அதன்மேல், தாம் சரியான விபரங்களுடையவரெனத் தெரிந்த வீரர்களுக்கோர் இலக்கமும் கொடுத்து அவ்வீரர் அவ்விலக்கத்தினலேயே போட்டி முடிவு வரையும் குறிப்பிடப்படுவர் என்ற கோட்பாட்டையும் வலியுறுத்திச் சென்றனர்.

இப் பரிசிலனையிற் தகுதி பெற்ற மாணவரே போட்டியிற் பங்குபற்றினர்.

சில ஆட்டங்கள் ஆடி முடிந்தபின், இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற ஒரு கோஷ்டியின் ஒரு வீரர், விளையாடத் தகுதி பெற்று இலக்கமும் கொடுக்கப்பட்டபின், கல்லூரியிலே கற்றற்குத் தகுதியை இழந்தவர் எனக் குறிப்பிட்டு ஆட்சேபம் கிளர்த்துவதும் அது குறித்து வாக்கெடுப்பதும் நீதியான செயல்களா?

அங்ஙனம் செய்யப்பட்டு அவ் வீரர் கலந்த கோஷ்டியை விளையாடவொட்டாமற் தடுத்து நிறுத்தியிருப்பது தான் யாருக்கும் புரியாத புதிராக உள்ளது.

யா. பா. வி. சங்க நிர்வாகத்தில் 1978ம் அண்டாகிய இவ்வாண்டு நிகழ்ந்த உதைபந்தாட்ட இறுதிப் போட்டி தொடர்ந்து நடைபெறுமல் இடையிலே இந்நாள் வரையும் தடையுண்டு நிற்பதற்குரியன வாய்அமைந்த நிகழ்வுகளை இங்கே தெரிவித்துள்ளோம்.

மேலே குறிப்பிட்ட அவ்வீரர் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனையையும் நாம் கேட்டறிந்தவாறு இங்கு குறிப்பிடல் நலம் எனக் கருதுகிறோம்.

க. பொ. த. உயர்தர வகுப்பிற் கற்றுக்கொண்டிருந்த அம் மாணவர், தமக்கேற்பட்ட கடுமையான சுகவீனம் காரணமாக முதன் முறை நடந்த தேர்வுக்குத் தோற்றவில்லை, அதனால் அவர் தொடர்ந்து இருமுறை தேர்வுகளுக்கு அமரவேண்டிய தகுதியைப் பெறத் தம் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் தயவை நாடினர். வைத்தியச் சான்றிதழையும் காண்பித்தார். இவரது நிலைகண்டிரங்கிய பாராளுமன்றப் பிரதிநிதி வடமாநிலக் கல்விப் பணிப்பாளரிடம், அம் மாணவர் தொடர்ந்து இரண்டாண்டுகள் கல்லூரியிற் கற்கலாம் என்ற அனுமதியைப் பெற்றுக்கொடுத்தார். இது கல்வித்திணைக்களத்தின் 1962 9ம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கு அமையவே செய்யப்பட்டது.

இதனால் அவ் வீரர் கல்லூரியில் கற்கும் தகுதியை இழக்கவில்லை என்பது யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதொன்றாகும்,

யா. பா. வி. சங்கம், தான் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு விதிகள் கொண்ட பிரசுரம் ஒன்றைச் அச்சடித்துப் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளது. அச் சுற்றுநிருபத்தில் எவ்விடத்திலாவது க. பொ. த. (உ. த) வகுப்பில் நான்கு ஆண்டுகள் கற்கும் மாணவர் பங்குகொள்ளலாகாது என்ற விதி இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

அ. தருமலிங்கம்
உதைபந்தாட்ட ரசிகன்
தெல்லிப்பழை.

## பொலிஸ் நிலையம் நிறுவக் கோரிக்கை

[உடுப்பிட்டி]

நெல்லியடியில் மீண்டும் பொலிஸ் நிலையம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை இப்பகுதிப் பொதுமக்கள் மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் கடந்த சில தினங்களாக அசம்பாவிதச் சம்பவங்கள், பெண்கடத்தல்கள் முதலிய குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இப்பகுதியில் பொதுமக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளதோடு நெல்லியடியில் தற்காலிக பொலிஸ் நிலையம் நிறுவித்தருமாறு கோரியுள்ளனர். (அ)

## வீதிகள் சீரமைப்பு

[புலோலி]

புலோலி கிராமசபை எல்லைக்குட்பட்ட சகல வீதிகளும் போக்குவரத்து நன்மை கருதிச் சீர்செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் பல புதிய வீதிகளும் அமைக்கப்பட்டுவருகின்றன. புலோலி கிராம சபை விசேஷ ஆணையாளரும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருமான திரு. வை. வேலும்மயிலுவின் துரித நடவடிக்கையையடுத்தே இவ்வீதிகள் சீர்செய்யப்பட்டுவருகின்றன. [அ]

# "கிராமங்கள் மூலமே நாடு பூரணத்துவம் பெறலாம்"

- கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்

[உடுப்பிட்டி]

"கிராமியப் பொருளாதாரத்தையும், பண்பாடுகளையும் வளர்ப்பதன் மூலமே கிராமங்களை முன்னேற்றலாம். கிராமங்களிலிருந்தே ஒருநாட்டின் பூரணத்துவத்தைப்பெற முடிகின்றது. இதனாலேயே எமது அரசாங்கம் கிராமங்களை அபிவிருத்திசெய்யவும், கிராம மக்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவியளித்து ஊக்குவிப்பதற்காகவும் அதிக பணத்தைச் செலவிட்டுவருகின்றது. சன சமூக நிலையங்கள் கிராம அபிவிருத்தியில் ஆற்றும்பணி அளப்பரியன"

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், "கிராமங்களின் குடிசைக் கைத்தொழிற்றுறைகள் பெரும்வருவாயைப் பெற்றுத்தரக்கூடியன. சன சமூக நிலையங்கள் தத்தமது கிராமத்தில் இக்குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பித்து நடாத்த முன்வரவேண்டும். இதன் மூலம் இளம் பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கமுடியும்'' என்று கூறினர்.

இக்கூட்டத்தில் திரு. ம. கணேசலிங்கம் புதிய தலைவராகவும், திரு. ஜே. எஸ். நல்லதம்பி உபதலைவராகவும், திரு. சி. தர்மகுலசிங்கம் செயலாளராகவும், திரு. ச. செந்தூராசா, உபசெயலாளராகவும், திரு. ஆ. இராசரத்தினம் பொருளாளராகவும் தெரிவாகினர்.

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் ஆய்வு உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமியும் சமூகமளித்திருந்தார்.

## திருவள்ளுவர் வெற்றி


[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூகநிலையத்திற்கும் சுதுமலை நாவலர் சன சமூக நிலையத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் திருவள்ளுவர் நிலையம் 2-1 கோல்களால் வெற்றியீட்டியது. மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியால மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. [உ]


தமரேன் எல்.சி.60

ஒரு புதி அற்புதமான BAYER சர்வ பூச்சி நாசினி

குத்தும், உறிஞ்சும், கடிக்கும் அரிக்கும் எல்லாப் பூச்சிகளை அழிக்கும்.



பயிரைப் பாதிக்கிறதா? வருவாயைக் குறைக்கிறதா?

பூச்சி, புழுக்கள் பயிரைப் பாதிக்காவண்ணம் பயிர்களைக் காத்து, அதிக பணலாபம் பெறும் வண்ணம் பல வருட நுட்ப ஆராச்சியின் நிறைவினால் மேற்கு ஜெர்மனியில் இருக்கும் பேயர் ஸ்தாபனம்- விவசாயிகளின் கவலையை புதிய தமரேன் எல். சி. 60 கிருமிநாசினியால் உடனே தீர்த்துவிடும். தற்பொழுது இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேகெம் லிமிட்டெட்.

தமரேன் தெளித்தவுடன் தொடர்புக் கொல்லியாகவும், பயிர் சாற்றுடன் சேர்ந்து நீடியகாலம் தங்கும் சக்தி வாய்ந்த நாசினியாகவும் பயன்படுகிறது. குத்தும் உறிஞ்சும், பூச்சி, களான வெண் ஈ, திரிப்ஸ், தத்துக்கிளி, அழுக்கணவன், மயிறஸ், வண்டு ஆகியவற்றையும் கடித்துண்ணும் இலையரிப்புழு, அறக்கொட்டியான், கம்பளப்புழு, இலை சுருட்டி ஆகிய பூச்சி புழுக்கள் எல்லாப் பயிர்களையும் பாதிக்காதுகட்டுப்படுத்தும் மிளகாய்-பொட்போர் (உறை துளை புழு) குருமண நோய் ஆகியவற்றை அழிக்கும்.

மரக்கறிவகை- கொறவணைபுழு, அழுக்கணவன், இலையரிப்புழு ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். நெல், சந்துகுத்தி, இலை சுருட்டி ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். பருத்தி, சோளம், கரும்பு, வாழை, திராட்சை ஆகிய பயிர்களிலும் பாவிக்கலாம்.

வேறு விபரங்களுக்கு:

ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு-10.

தொலைபேசி: 93563
96331-6

### பெண்கள் தாக்கப்பட்டதன் எதிரொலி:

# பல்கேரிய ராஜீய உறவை எகிப்து துண்டித்தது

கெய்ரோ, டிச. 6

பல்கேரியாவுடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக்கொள்ள எகிப்து முடிவு செய்துள்ளது.

கெய்ரோவிலுள்ள பல்கேரியாத் தூதரக அதிகாரிகள் இன்னும் மூன்று தினங்களுக்குள் தூதரகத்தைவிட்டுவெளியேறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்கேரியாவிலுள்ள எகிப்திய தூதரும் திருப்பியழைக்கப்படவிருக்கிறார். கெய்ரோவிலுள்ள பல்கேரியத்தூதரகத்தில் நடைபெற்ற சம்பவத்தை யடுத்தே இரு நாடுகளுக்கும் இடையில் கசப்புநிலை உருவாகியது.

#### தூதரகத்தில் நடந்த சம்பவம்

அந்தச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கெய்ரோவிலுள்ள பல்கேரியத்தூதரகத்தை பொலிசார் நேற்று முன்தினம் முற்றுகையிட்டு அதிகாரிகள் பலரைக் கைது செய்துள்ளதுடன் அங்கிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டனர்.

#### பெண்களைத் தாக்கினர்

கடந்தஞாயிற்றுக்கிழமைதூதரக அதிகாரிகள் மூன்று எகிப்தியப் பெண்களைத் தாக்கினார்கள். தூதரகத்துக்கு வெளியே திரண்ட கூட்டத்தினரைக் கலைக்க அவர்கள் ஆகாயத்தை நோக்கித்துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். இதனைத்தொடர்ந்தேஎகிப்திய அதிகாரிகள் தூதரகத்தை முற்றுகையிட்டனர்.

ஜனாதிபதி அன்வர் சதாத்தின் உத்தரவின் பேரிலேயே பொலிசார் இந்நடவடிக்கையை எடுத்தனர்.

மேற்கண்டவாறு மேனா செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

#### மாடிக்கட்டிடத்தில் தாயும் மகள்களும்

பல்கேரியாவால் 18 வருடங்களுக்கு முன்னர்வாங்கப்பட்ட நான்குமாடிக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியிச் மூன்று பெண்களும் (தாயும் மகள்களும் குடியிருந்துவந்தார்கள்.

கட்டிடத்தை விட்டுச்செல்லுமாறு தூதரகத்தினர் வினயமாகக் கேட்டும் அவர்கள்செல்லாததால் அவர்களைக்கடுமையாகத் தாக்கினராம். [உ]

## பாரத - ரஷ்ய தொழில்நுட்ப உறவு

புதுடில்லி, டிச. 6

பாரதமும் சோவியத் யூனியனும் தொழில்நுட்ப ரீதியிலான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளவிருக்கின்றன.

இந்தவகையில் இருநாட்டு அதிகாரிகளும் புதுடில்லியில் வைத்துப் பத்திரப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டனர்.

அடுத்த சில தினங்களில் சோவியத் யூனியனில் இருந்து நிபுணர் குழு ஒன்று பாரதம் வரவிருக்கிறது. பாரத நிபுணர் குழுவும் சோவியத் யூனியனுக்குச் செல்லும். [உ]

### நெருக்கடிகால வழக்குகள்:

# விசேட நீதிமன்றம் அமைக்க அமைச்சரவை அனுமதி!

புதுடில்லி, டிச. 6

முன்னைய ஆட்சி சம்பவங்கள் தொடர்பாக நெருக்கடி கால வழக்குகளை விசாரணை செய்வதற்கு விசேட நீதிமன்றம் அமைப்பதற்குவழிசமைக்கும் மசோதாவை மத்திய மந்திரிசபைநேற்றுஏற்றுக்கொண்டது. இவ்வழக்குகளை துரிதமாக விசாரணை செய்வதற்கு விசேட நீதிமன்றம் அமைக்கலாம் என்று சுப்ரீம்கோர்ட் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

மந்திரிசபைக் கூட்டத்தில் சட்டமந்திரி திரு. சாந்திபூஷண் தவிர்ந்த ஏனைய மந்திரிகள் கலந்துகொண்டனர்.

அவர் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (உ)

## பூட்டோவுக்கு அனுமதி

லாகூர், டிச. 6

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோ தமக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து தனிப்பட்ட முறையில் உயர் நீதிமன்றத்தில் வாதாட அனுமதி கோரி விண்ணப்பம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஜெனரல் ஷியாவுல் ஹக் தலைமையிலான இராணுவ அரசு இந்த அனுமதியை வழங்கியது. (உ)

## தட்டுப்பாடு

[நெல்லியடி]

கரவெட்டி உதவி அரசாங்க அதிபரின் நிர்வாகத்திற்குட்பட்ட பல பகுதிகளிலும் மண்ணெண்ணைக்கு பெருந் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

### அமெரிக்க வெளிநாட்டமைச்சர்

# இஸ்ரேல், எகிப்துக்கு விஜயம் செய்வார்

வாஷிங்டன், டிச. 6

மத்தியகிழக்குப் பிரச்சினையில் எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமிடையில் சுமுக சூழ்நிலையை உருவாக்கி சமாதானப்பேச்சு வார்த்தைகளை மீண்டும் நடத்தச் செய்யும் நடவடிக்கையாக அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மிகார்ட்டர் தமது வெளிநாட்டமைச்சரை எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் அனுப்பவிருக்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கச் செய்ய வெளிநாட்டு அமைச்சர் திரு. வைசஸ்வான்ஸின்விஜயம் வழிவகுக்குமென ஜனாதிபதி திரு. கார்ட்டர் நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

#### ஐ. நா. வில் எகிப்திய பிரதிநிதி

இது இவ்வாறிருக்க, ஐ.நா பொதுச்சபையில் எகிப்திய பிரதிநிதிபேசுகையில், ''கேம்ப் டேவிட்உடன்படிக்கை அமுல் செய்யப்படவேண்டும்'' என்று வலியுறுத்தினர். (உ)

# மந்திரிசபையில் சரண்சிங் சேர எவரும் எதிர்ப்பில்லை!

— சந்திரசேகர்

புதுடில்லி, டிச. 6

''முன்னாள்உள் துறைஅமைச்சர் திரு. சரண்சிங்கை மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சர்கள் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை'' என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

திரு. சரண்சிங் விடயம் தொடர்பாக திரு. சந்திரசேகர் கட்சியின் மூத்த தலைவர்களையும் அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

பிரதமமந்திரிதிரு மொரார்ஜி தேசாயும் திரு சரண்சிங்கும் நேற்று முன்தினம் சந்தித்து உரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ அதிகாரிகள் பலருக்கு 'கல்தா!'

### அதிபர் இடிஅமின் நடவடிக்கை

கம்பாலா, டிச. 6

உகண்டா ஜனாதிபதி இடிஅமின் பலசிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்துள்ளார்.

தான்ஸானியா மீது கடந்த அக்டோபரில் உகண்டா மேற்கொண்ட தாக்குதலை பிரஸ்தாப அதிகாரிகள் கண்டித்ததே இப் பதவிநீக்கத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உகண்டாவுக்கும் தான்ஸானியாவுக்கும் இடையில் நல்லுறவை உருவாக்கும் பொருட்டு சூடான் ஜனாதிபதி கம்பாலா வந்தடைந்துள்ளார். [உ]

## பாரத-மலேஷிய கூட்டுத் தொழில்

புதுடில்லி, டிச 6

பாரதமும், மலேஷியாவும் கூட்டுத் தொழில் முறையில் மேலும் வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

இதுபற்றி இரு நாட்டு அதிகாரிகளும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். [உ]

# சர்வகட்சி மாநாடு: சாத்தியம் உண்டு

- ரொடீஷியப்பிரதமர்

சாலிஸ்பரி, டிச. 6

''ரொடீஷிய விவகாரம் தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் மாநாடு கூட்டும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளன'',

இவ்வாறு ரொடீஷியப் பிரதமர் திரு. இயன் ஸ்மித் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை பிரிட்டிஷ், அமெரிக்கத் தலைவர்கள் ரொடீஷிய இடைக்கால அரசுத் தலைவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர். [உ]


## நெற் களைகளை ஒழிக்க நிகரற்ற வழி

## ஹெடோனல் எம் 40%

40% எம். சீ. பீ. ஏ. சோடியம், பொட்டேஷியம் உப்புகள் கொண்டது.

நெற் பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகளை அதிவுண்மையுடன் கட்டுப் படுத்த வல்லது ஹெடோனல் எம் 40%. அபாயகரமான அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் மிகச் சுலபமாக அழித்தொழித்து, நெல் விளைச்சல் நேர்த்தியாக நிகரற்றுப் பெருக வழி செய்கிறது அது.

ஹெடோனல் எம் 40% பாவித்து விளைச்சலைக் கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.






இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: 93563, 96331-6

maIADS

# 'ஈழநாடு' வெற்றிக் கிண்ண மின்னொளி உதைபந்தாட்டம்

## யங்ரேயல் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்[

'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்காக காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக் கழகத்தால் மின்னொளியில் நடாத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வெளியிடங்களைச் சேர்ந்த பல கழகங்கள் முன் வந்துள்ளன.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல கழகங்களும், கல்லூரிகளும் விண்ணப்பித்துள்ளன.

எதிர்வரும் தைமாதம் 5ம் திகதி தொடக்கம் 9-ம் திகதி வரை காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் தொடர்ந்து ஐந்து நாட்கள் இப்போட்டி நடைபெறும். கண்டி, நுவரெலியா, நாவலப்பிட்டி, வவனியா, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த கழகங்களும் வடபகுதியைச் சேர்ந்த இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி, யாழ். சென் பற்றிக்ஸ், தெல்லிப்பளை மகாஜனா, யூனியன் கல்லூரிகளும்இப்போட்டிகளில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

அத்துடன் வடபகுதியின் மற்றும் சிறந்த விளையாட்டுக்கழகங்களான தென்மயிலை ஞானோதயா, குப்பிளான் விக்னேஸ்வரா, வல்வெட்டித்துறை புளூஸ், இளவாலை உதயசூரியன், நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூகநிலையம், கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலியனவும் இப்போட்டிகளில் பங்குபற்றும்.

காங்கேசன்துறையங்ரேயல் விளையாட்டுக்கழகத்தின் விசேஷநிர்வாகசபைக்கூட்டம் கழகஉபதலைவர் திரு க. தனபாலசிங்கம் தலைமையில்நடைபெற்றபொழுது விளையாட்டுப் பிரிவுச் செயலாளராக திரு. நா. நவரத்தினமும், பொருளாளராக திரு. கு. ஸ்கந்தராசாவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.(உ)

### சவர்க்காரம், கிழங்குவகை அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

ஏழாயிரம் சவர்க்காரககட்டிகளையும், ஆயிரம் ருத்தல் கருனைக்கிழங்குகளையும், ஆயிரம் 'பக்கற்' கிரைவிதையையும் சூறுவளியால் பாதிக்சப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கு யாழ். மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கியது. இப்பொருட்களைத் தமது வாகனத்தில் நேரில் கொண்டு சென்று வழங்கிய இவர்கள் அங்கு சேவையிலீடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கு நூறு பனைஓலைத்தொப்பிகளையும் வழங்கினர். இவை தவிர யாழ்வளாகத்தினர் தாம் சகரித்த பொருட்களை கிழக்கு மாகாணத்திற்கு எடுத்துச் சென்று வழங்குவதற்கு லொறி சேவையையும் மில்க்வைற் ஸ்தாபனத்தினர் இலவசமாக வழங்கினர்.

இரண்டாவது தடவையாகவும் தாம் உதவிகள் வழங்க விருப்பதாக மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா தெரிவித்தார். [அ]

### சிகரட்வான் கொள்ளை: 2 சந்தேகநபர்கள் விடுதலை!

[யாழ்ப்பாணம்]

சிகரட் வான் கொள்ளை வழக்கில் இரு சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி சிவரத்தினம் சட்டத்தரணி செல்வி ஷிராணி கனகரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள் வழக்காளி தரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மிஸ்கின் வழக்கை நடத்தினார்.

முதல் மூன்று சந்தேகநபர்களும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர் மற்றும் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். (க-அ)

### இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பட்டணசபை விசேஷ ஆணையாளர் திரு. ஏ. ஞானசேகரம் இம் மாதம் 10ம் திகதி தொடக்கம் முல்லைத்தீவுப் பட்டணசபைக்குஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### உதவிப்பொருள்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

''எப்படி வருவது?'' என்று கேட்டார் தர்மர்.

''அவருக்குத்தான் விமானம்] கொடுக்கிறார்களே, ஹெலிகொப்டர் கொடுக்கிறார்கள், அப்படியிருக்க ஏன் வர முடியாது?'' என்று திருப்பிக் கேட்டார் அவர்.

எம். பி.க்கள் நால்வரும் நிலைமையைத் தெளிவாக விளக்கினார்கள்.

திரு. அமிர்தலிங்கம் மட்டக்களப்பு விமான நிலையத்திலிறங்கி படகுகளிலும், நடையிலுமாக நடந்தே செல்ல முடியாத வீதிகளினூடாக கச்சேரிக்கும் அகதிகள் தங்கியிருந்த இடங்கள் மற்றுமிடங்களுக்கும் அவர் சென்றார். என்பதையும், வீதிகள் போக்குவரத்துக்கு ஏற்றதாக்கப்பட்ட முதல் சந்தர்ப்பத்திலேயே தாங்கள் வந்திருப்பதையும் அவர்கள் கூறினார்கள்.

அதற்கப்புறம் தமது தொகுதி எம். பி. எப்படி நடந்தார்? அவருக்கு நடந்தது என்ன? என்றும் அவர்கள் கூறினார்கள்.

தினமும் அங்கிருந்து உணவுப் பொருட்களை தாம் மட்டக்களப்புப் பகுதிகளுக்கு அனுப்பிவைப்பதாகவும் அவர்கள் கூறிக்கொண்டிருந்த வேளை பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரண வேலைகளை சிரமதானமாக மேற்கொள்வதற்காக மறுநாள் காலை அனைவரையும் பள்ளிவாசலில் கூடுமாறு கார் ஒன்றில் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் அதிக சேதமேற்படாவிடினும் சில பகுதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர்கள், பாதிக்கப்பட்ட அவ்விடங்களைப் பார்வையிட்டு செல்லும்படியும் கூறினார்கள்.

அக்கறைப்பற்றுக்கு அப்பால் சாப்பாட்டுக்கோ, தங்குவதற்கோ வசதிகள் கிடைக்காது. இரவை அக்கறைப்பற்றிலேயே கழிப்பதற்கான விவேகமானது என்றும் மேலும் ஆலோசனை வழங்கிய அவர்கள் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

அவர்களின் ஆலோசனை ஏற்கப்படவேண்டிய தாகத் தானிருந்தது.

சின்னமுகத்துவாரம் வாடி வீட்டுக்குச் செல்லலாமென்று தீர்மானிக்கப்பட்டாயிற்று. திரும்பி அங்கு சென்றோம்.

மழை பெய்து கொண்டிருந்தது மணல் மூடியிருந்த அந்தப்பாலத்தில் ஒரு '104' கார் புதைந்து நின்றது இருவர் தள்ள முயற்சிக்கிறார்கள் கார் அசையவில்லை.

'ஜீப்'பை நிறுத்திவிட்டு இறங்கினோம்

தூறல் மழை!

நனைந்தபடியே அனைவருமாக காரைத்தள்ளினோம்.

அரைமணிநேரம் அரிதின் முயன்று கார் அசைந்தது! வீதிக்குவந்தது.

அக்கறைப்பற்று வைத்திய அதிகாரி டாக்டர் அருணானந்தராஜா என்று தன்னை அறிமுகம் செய்தார் காரில் வந்தவர்.

சின்னமுகத்துவாரம் வாடி வீட்டில் அறைகள் எதுவும் காலியாக இருக்கவில்லை.

நடு ஹாலில் படுக்கை கிடைத்தது.

நடுச்சாமம் பெய்த மழையின் ஒழுக்கில் 'பெட்சீட்'டுகள் நனைந்திருந்தது காலையில் எழுந்தபோது தெரிந்தது. (தொடரும்

### ப. நோ. கூ. சங்கம் நிதியுதவி

[யாழ்ப்பாணம்]

சூறுவளி, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களுக்காக. தென்மராட்சி மேற்கு பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம் (கைதடி) ஐநூறு ரூபாய் நிவாரணநிதி வழங்க முடிவுசெய்துள்ளது. மேற்படி சங்கப் பணியாளர்கள் ஏற்கனவே ஒருநாள் சம்பளத்தை நிவாரணநிதியாக சங்கத்திடம் வழங்கியுள்ளனர். (கெ-அ)

### கொலை மிரட்டல் கடிதம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளையில் உள்ளமில் ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ள மிரட்டல் கடிதம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

முள்ளியவளை வற்றாப்பளை வீதியில் உள்ள அரிசிமில் ஒன்றுக்கு இம்மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அக்கடிதத்தில் ''செல்லத்துரை அறிவது நாங்கள் உனது மகன் ஜெகனைக் கொலைசெய்யப்போகிறோம். ஆனபடியால் உனது மகன் உயிருடனிருக்க வேண்டுமானால் 40,001 ரூபா வைக்கவேண்டும். வைக்காது பொலிசில் புகார் செய்தால், மில், லொறி, வான் யாவும் தீக்கிரையாக்கப்படும்'' என்று கூறப்பட்டிருப்பதாக புகாரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

### இணைந்துசேவை

(திருமலை)

கிழக்கிலங்கையில் வெள்ளம், சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு முகமாக திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்றமும், அகில இலங்கை காந்தீய சேவா சங்கமுமிணைந்து நிவாரண நிதி திரட்டுவதிலீடுபட்டு வருகின்றன. இவ்வியக்கம் தொடர்ந்து ஆறுமாத காலமாக இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றமும் இவற்றுடன் ஒத்து உதவ முன்வந்துள்ளது. [கே-அ]


நாகம்ஸ் (சுன்னாகம்)
2-வது வாரம்
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - தேவிகா
சாந்தி

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே திரையிடப்படுகின்றது
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - எஸ். எஸ். ஆர். கிரிஜா - ரி. ஆர். ராஜகுமாரி - கண்ணாம்பா நடித்த
மனோகரா (புதிய பிரதி)

2-வது ஹவுஸ் புல் வாரம்!
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு நடித்த (இரு வேடங்களில்)
சபாஷ் மீனா (புத்தம் புதிய பிரதி)

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ஏமாற்றத்தைத் தவிர்க்க ரிக்கற்றுக்கு முந்துங்கள் 2-வது ஜனத்திரள் வாரம்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மணி' அதிசிறந்த கராட்டிச் சித்திரம்

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்] எம். ஜி. ஆர். - பத்மினி வீரப்பா - தங்கவேலு நடித்த
விக்கிரமாதித்தன் (புதியபிரதி)

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் போன்: 466
6-வது வெற்றி வாரம்
ஸ்ரீ சிவராம் ஸ்ரீ சந்திரகலா ஸ்ரீ தனரத்தினம் நடித்த
அநுராகம்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 3 காட்சிகள் சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
நாளை முதல் லலிதா

லிடோ [யாழ். நகர்] போன்: 7898 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

மனோகரா [யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்-சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m,
SPECIALIST
Full action Film
From 8-12-78
Killers are Challenged

Rio (Jaffna)
Daily 4 Shows
CHEYENNEY SOCIAL CLUB
((Color-Scope-Cowboy

## தமிழ்க்காங்கிரஸ் வழக்கு:

# "கூட்டணி எம். பி.க்கள் தமிழ்க் காங்கிரஸில் இருக்கமுடியுமா?"

## புதிய அரசியலமைப்பைச் சுட்டிக்காட்டி எதிர்மனுதார் சார்பில் கேள்வி

### விசாரணை தமிழில் நடந்தது

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் அங்கீகரிக்கப்பட்ட தனித்தனி அரசியல் கட்சிகள் புதிய அரசியல் அமைப்பு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு கூட்டணி எம். பி.க்களாக இருக்கும் மனுதார்கள் மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தமிழ்க்காங்கிரஸின் உறுப்பினர்களாக இருக்க முடியுமா?

தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை தடை செய்யக் கோரி தாக்கல்செய்த வழக்கின் இடைக்கால தடை உத்தரவு விசாரணையில் எதிர்மனுதார சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜீ. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று மூன்றாவது தினமாக இவ்விசாரணை நடைபெற்றது.

#### தடைசெய்யக்கோரி மனு

நல்லூர் கல்யாண மண்டபத்தில இம்மாதம் 10-ம் தேதி நடைபெறவிருக்கும் மாநாட்டை தடைசெய்யக் கோரி, நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவுனியா எம். பி திரு. ரி. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி திரு ரி. திருநாவுக்கரசு ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு ரி. சங்கரப்பிள்ளை, திரு. எம். கே. சுப்பிரமணியம், திரு ரி. பரமானந்தராசா ஆகியோர் எதிராளிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

மனுதார் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி நாகராசா, என் ருத்திராமூர்த்தி, என் வரதராசா செல்வி பொன்னையா ஆகியோர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிர்மனுதார் சார்பில் சட்டத்தரணிகளான எஸ் ஆர் கனகநாயகம், ரி சங்கரப்பிள்ளை, எம். எஸ் சுந்தரலிங்கம், ஆர் என். சிவப்பிரகாசம், என். ரி. சிவஞானம், எம். கே. சுப்பிரமணியம், எஸ். செல்வராசா, செல்வி அபிம்னசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

#### கட்டாணை வழங்கப்பட்டது

3ம் எதிர் மனுதாரான எம். கே. சுப்பிரமணியம் நேற்று கோட்டிற்கு வந்திருந்தார். அவருக்கு கட்டாணை வழங்கப்பட்டது.

3ம் மனுதாரரான வட்டுக்கோட்டை எம். பி திரு. ரி திருநாவுக்கரசு நேற்று வந்திருந்தார்.

கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி, சாவகச்சேரி எம். பி. திரு வி. என் நவரத்தினம், தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் ஆகியோரும் வந்திருந்தனர்.

4ம் எதிர் மனுதாரான ரி. பரமானந்தராசா கோட்டிற்கு வரவில்லை.

அவர் தற்சமயம் கொழும்பில் இருப்பதாகவும், அவர் பொறுப்பை தான் ஏற்பதாகவும், விசாரணையை நடத்தலாமென்றும் சட்டத்தரணி என். ரி, சிவஞானம் தெரிவித்தார்.

#### விசாரணை தமிழில்

விசாரணை தமிழில் நடைபெற்றது. முதலில் மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை சமர்ப்பணங்களை சமர்ப்பித்தார்.

#### காங்கிரஸ் அங்கத்தவர்

சட்டத்தரணி கதிரவேலுப்பிள்ளை கூறியதாவது: மூன்று வழக்காளிகளும் தமிழ்க்காங்கிரஸ் அங்கததவர்கள். 1-வது வழக்காளி தமிழ்க்காங்கிரஸ் தலைவர், 2ம் வழக்காளி பொதுச்செயலாளர். 3ம் வழக்காளி பொருளாளர், 2ம் வழக்காளி அங்கீகரிக்கப்பட்ட முகவர். இதுதான் மனுதார்கள் நிலை. இந்நிலையிலிருந்து அவர்கள் பதவியில் இருக்கும் வேளை இந்த எதிராளிகள தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை இம்மாதம் 10ம் திகதி கூட்ட முயற்சிக்கிறார்கள், எங்கள சமர்ப்பணம் இன்று நாங்கள் கோரிய எல்லாப்பிரகடனங்களையும் தீர்க்கவேண்டியதில்லை, ஒன்றே ஒன்று மட்டும் மிகத்தெளிவாகக் கேட்கிறோம். நாங்களோ, அவர்களோ அல்லது எவர்களோ யாப்பின் பிரகாரம் 10ம் திகதியோ, அதற்கு முன்போ பின்போ தமிழ்க் காங்கிரஸ் மாநாட்டை நடத்தலாமா எனத் தீர்மானிக்கவேண்டும்.

யாப்பின் பிரிவுக்கு முரணாக எதிரிளிகள் செயல்படுகிறார்கள அதை மட்டும் காட்டினால்போதும், மனுவில் உள்ள மற்றப் பிரகடனங்களை பிறகு தீர்க்கலாம், முழுவதையும் உடன்தீர்க்கவேண்டு மென்றும் ஏற்கிறோம்.

#### சந்தியில் கூடி

3-9-78ல் அழைக்க உரிமையற்றவர்கள தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு என்ற கூட்டத்தைக் 'கூட்டியுள்ளார்கள், அது செயற்குழுக் கூட்டமல்ல, யாரோ சிலர் சந்தியில்கூடி தீர்மானித்துள்ளார்கள.

சட். கனகநாயகம்: இப்பதான் நீங்கள சந்திக்கு வந்திருக்கிறீர்கள.

சட் நாகராசா: இது சந்தையல்ல கோடு.

சட், கனகநாயகம்: ஆவரங்கால் சந்தையல்ல.

நீதிபதி: இனிமேல் குறுக்கீடுகள. குறிப்புகள் எதுவும் இங்கு எவரும் சொல்லக்கூடாது.

சட். கதிரவேலுப்பிள்ளை: முதலில் மனுவில் தெரிவிக்கப்பட்ட மாநாடு தடைபற்றி தீர்க்கலாம், பின் மற்ற விஷயங்களபற்றி ஆலோசிக்கலாம்

#### முறைப்படி தாக்கலாகவில்லை

சட்டத்தரணி ரி சங்கரப்பிள்ளை கூறியதாவது: சட்ட முறைப்படி இந்த வழக்குதாக்கல்செய்யப்படவில்லை, இது தேர்தல் ஆணையாளரின் விசாரணைக்கு மாறான நடவடிக்கையாக இருக்கிறது. இடைக்கால தடைச்சட்டம், ஒருவருக்கு ஒரு நிவாரணம் கிடைக்க உரித்து இருக்குமானால், அது கிடைக்க கேட்பதுண்டு, நஷ்டம். சேதம், பிரதான விஷயமா என ஆராய்ந்து தடைகொடுக்கவேண்டும்.

#### 90 நாட்களின் பின்பு

சட்டத்தரணி கனகநாயகம்: மனுதார்கள் கடந்த 3 மாதங்களாகத் தடைஉத்தரவுகேட்கவில்லை, 90 நாட்களுக்குபின்பு இன்று தடைஉத்தரவு கேட்பது அவசரத்திற்காக,

சட். கதிரவேலுப்பிள்ளை: செப்டம்பர்மாதம் செயற்குழு நடந்திருக்கிறது. அக்டோபர் மாதம் 3ம் மனுதாருக்கு செயற்குழுவுக்கு வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. பொதுச்செயலாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் என கையொப்பமிட்டு அந்த அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

#### தடைகளை ஆட்சேபிக்கிறேன்

சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம்: தடைகளை ஆட்சேபிக்கிறேன், தடைக்கு முன்பாக தங்களுக்கு காங்கிரஸ் சாரிபாக எதிர்மனுதார்களுக்கு எதிராக இடைக்கால தடைஉத்தரவு எடுப்பதற்கு உரித்துண்டு என்பதை ஸ்தாபிக்கவேண்டும். இடைக்கால கட்டளை எடுப்பதற்கு மனுதார்கள் தங்கள அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஸ்தாபிக்கவேண்டும். அதன்பின்தான் வழக்கில் உத்தரவு எடுக்கக உரித்து உண்டு.

#### மனுதார்கள் எம். பிக்கள்

மனுதார்கள் எம்.பிக்களாக இருக்கின்றார்கள், அவர்கள நாங்கள் அறிந்தவரை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களாக இருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கீகரிக்கப்பட்ட புறம்பான அரசியல் கட்சி, ஆகவே இரு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளில் அங்கத்தவர்களாக இருக்கிறோம் என இடைக்காலத் தடைஉத்தரவு எடுக்க முடியுமா? எடுக்கமுடியாது. இந்த யாப்புக்கு அமைந்த அங்கத்தவர்களாக மனுதார்கள் இல்லாவிடில் இந்த வழக்கை தாக்கல்செய்ய முடியாது.

#### யாப்பிற்கு அமைந்ததா?

சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை கீழ்க்காணும் வினாக்களை எழுப்பினார் எதிராளிகள் டிசம்பர் 10 ம் தேதி நடத்த உத்தேசித்திருந்த மாநாடு கட்சியின் யாப்பிற்கு அமைந்ததா? 3-9-78 ல் நடந்ததாகக் கூறப்படும் செயற்குழுக் கூட்டம், யாப்பின்படி செல்லுபடியானதா? இந்த யாப்பின்படி மாநாடு நடத்துவதற்கான முன் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? குறித்த மாநாட்டிற்கு யாப்பின்படியான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டதா? குறித்த மாநாட்டை நடாத்த கட்சியின் செயற்குழு எப்போதாவது தீர்மானித்ததா?

#### காங்கிரஸ் கமிட்டியில்

சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், கீழ்க்காணும் கேள்விகளை எழுப்பினர். மனுதாரர்கள தாக்கல் செய்த வழக்கு, இம்மன்றுக்கு அவ்வழக்கு தாக்கல் செய்யுமுன், யாப்புடபடி காங்கிரஸ் கமிட்டியில் தங்கள் பிரச்னையை முதல் எழுப்பாமல், அங்கு தீர்ப்பு பெறுமல், இங்கு வழக்கு தாக்கல் செய்யமுடியுமா? அவ்வாறு காங்கிரஸ் கமிட்டி தீர்ப்டை சாதகமாகவோ பாதகமாகவோ பெற்றார்கள் என்று மனுதார் கூறியிருக்கின்றார்களா? கூறுவிடில, தமிழ்க்காங்கிரஸ் சார்பில் வழக்கு தாக்கல செய்வது சட்டத்திற்கு முரணானது.

#### தேர்தல் ஆணையாளர் முன்

தேர்தல் ஆணையாளரிடம், 2 ம் மனுதார் திரு. எம். சிவசிதம்பரமும், 1 ம் எதிர்மனுதார் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும விண்ணப்பம் செய்து, அவ்விசாரணை முடிந்து தீர்ப்பை எதிர் நோக்கும் வேளையில், இம்மனு தவறான நோக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும். சட்டத்தரணி கனகநாயகம் தெரிவித்தார்.

சட். சங்கரப்பிள்ளை: தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களாக மனுதார்கள் இருந்துகொண்டு, தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டைத் தடை செய்ய உத்தரவு கோரலாமா?

சட். கதிரவேலுப்பிள்ளை: காங்கிரஸில் இருந்துகொண்டு 1 ம் எதிர்மனுதார் ஜீ. ஜீ. பொன்னம்பலம், கூட்டணியில் போட்டியிட விண்ணப்பித்தார்.

சட். கனகநாயகம்: புதிய அரசியலமைப்பு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பிறம்பான அரசியல் கட்சியான, தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களாக இருந்துகொண்டு, மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தமிழ்க் காங்கிரஸில் உறுப்பினராக இருக்க முடியுமா?

#### இரு கட்சியில் இருக்கலாமா?

சட். எம். கே. சுப்பிரமணியம், ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட இருஅரசியல்கட்சிகளில், உறுப்பினராக இருக்க முடியுமா?

சட். கதிரவேலுப்பிள்ளை; அமரர் ஜீ ஜீ. பொன்னம்பலம், கூட்டணி தலைவர்களில் ஒருவராகவும், தமிழ்க்காங்கிரஸ் தலைவராகவும் இருந்தார்.

சட். கனகநாயகம்: தேர்தல் காரணத்திற்காக திரு. தொண்டமான் தலைமையிலான காங்கிரஸும், அமரர் பொன்னம்பலம் தலைமையிலான காங்கிரஸும், அமரர் செல்வநாயகம் தலைமையிலான தமிழரசும் முன்பு இணைந்தன.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும், திரு. என் எம். பெரேராவும். திரு. பீட்டர் கெனமனும் தேர்தல் காரணத்திற்காக இணைந்து ஆட்சிபுரிந்தார்கள், பின் இன்று பிரிந்துவிட்டார்கள். இதேபோல்தான், இந்த நிலைமையும் கூட்டணியும், காங்கிரஸும் தனித் தனிக் கட்சிகள்.

சட்டத்தரணி என். ரி. சிவஞானம் இன்று சமர்ப்பணம் தெரிவிப்பார். இன்று காலை 10 மணிக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

(சு)

---

## வடமராட்சிக்கு 1500 மண்வெட்டிகள்

(புலோலி)

வடமராட்சிப பகுதி விவசாயிகளின் நன்மை கருதி இப பகுதி விவசாயிகளுக்கென இறக்குமதிசெய்யபட்ட 1500 யாழ் ரக மண்வெட்டிகள் புலோலி கமநலச் சேவைநிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

ஆரம்பத்தில் 1000 மண்வெட்டிகளே வரவிருந்ததாம், ஆனல் இபபகுதி விவசாயிகளுக்கு இத்தொகை போதாது என்பதை புலோலி கமநலச் சேவை நிலையத்தார் எடுத்துக்காட்டியதைத் தொடர்ந்தே மேலதிகமாக 500 மண்வெட்டிகள் வந்து சேர்ந்தன.

இம்மண்வெட்டிகள் யாவும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் சிபார்சின்பேரில் வழங்கப்பட்டுவருகிறது,

[அ]

---

## சங்கீதப் பரீட்சை 21ந்திகதி ஆரம்பம்

[உடுப்பிட்டி]

வட இலங்கைச் சங்கீதசபையினுல் நடாத்தப்படும் கர்நாடக சங்கீத செயன்முறைப் பரீட்சைகள் இம்மாதம் 21ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக வட இலங்கைச்சங்கீதசபைத்தலைவரும், வடமாநிலக்கல்வி அதிபதியுமான திரு. தி. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள்யாழ் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஊர்காவற்றுறை கரம்பன் சண்முகானந்தா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல் லூரி, வவுனியா மகாவித்தியாலயம், கொழும்பு பம்பலபிட்டி இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் தமிழ்க்கலவன் பாடசாலை, திருக்கோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[அ]

---

## ஜாப். மந்திரிசபை ராஜினமா

டோக்கியோ, டிச. 6

ஜப்பானில் திரு. புக்கூடா தலைமையிலான அமைச்சரவை இன்று ராஜினமாச் செய்துள்ளது

ஆளும் லிபரல் கட்சித் தலைமைப் பதவிக்கான தேர்தலில் அவர் தோல்வியடைந்ததையடுத்து அவர் பதவி துறந்தார். திரு ஒஹியா தலைமையிலான புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவிருந்தது, (உ)

---

## வாழைக்குலைகள்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள சந்தைகளில் வாழைக்குலைகள் தேங்கிக் கிடக்கின்றன.

அண்மையில் வீசிய சூறாவழியினுல் வடமராட்சிப்பகுதியில் உள்ள பல வாழைத்தோட்டங்கள் வாழைக்குலைகளுடனே முறிந்து வீழ்ந்தழிவுற்றதே அதற்குக் காரணமாகும்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Telegram Eelanaadu Telephone: 889, Registered as a Newspaper in SriLanka'